10.06.2025



**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.121/2016</u>**

**<u>வா.சா. 1–செந்தில்குமார், த/பெ.செல்லதுரை</u>**

**<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>**

**<u>5 மற்றும் 7 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

12. பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கினை என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் 5ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் வழக்கு சொத்து பாதையை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டியுள்ளார். அதற்காக தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சர்வே எண்.187/13 ஆகும். தாவா சொத்தினை 2006ம்ஆண்டு ஒரு கோவிந்தம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். 5ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் இடத்திற்கு உண்டான சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் வடபுறத்தில் சர்வே எண்.187/11 கிழமேலாக அரசு புறம்போக்கு நிலம் உண்டு என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்வடலாக சர்வே எண்.187/17 அரசு புறம்போக்கு பாதை என்று சொன்னால் சரிதான்.

13. வழக்கு சொத்தினை அரசு சர்வேயர் அளவிடும் போது 5ம் பிரதிவாதி அளந்ததாக சொல்வது சரியல்ல என்று சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதி தன்னுடைய நிலத்தை யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 5ம் பிரதிவாதி

தன்னுடைய நிலத்தை 02.03.1980 ம் ஆண்டு கிரையம் பெற்றார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 5 ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் தன்னுடைய நிலத்தினை அங்கமுத்து என்பவரிடமிருந்து கிரையம் பெற்று வாய்க்காரராக ராதாகிருஷ்ணன் மற்றும் அவருடைய சகோதரர் ரகுநாதன் ஆகிய இருவரும் சமமாக பிரித்து கொண்டார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியும். அவ்வாறே ராதாகிருஷ்ணனும், ரகுநாதனும் தங்களுடைய நிலத்தில் கூரை வீடு அமைத்து, மின்இணைப்பு பெற்று அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

14. 5 ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் அதன் பிறகு சகோதரர் ரகுநாதனிடமிருந்து 04.05.2010 ம் ஆண்டு அவருடைய நிலத்தினை கிரையம் பெற்று முழுமையாக கெட்டி மெத்தை வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். சர்வே எண்.187/11 என்ற நிலத்தின் அமைந்துள்ள பாதையின் கீழ்புறம் 2 மீ அகலமும், மேல்புறம் 3.6 மீ அகலமும் உண்டு என்று சொன்னால் சரியல்ல, கீழ்புறம் 3 மீ அகலமும், மேல்புறம் 3 மீ அகலம் தான் உள்ளது. இந்த அளவுகள் கிராம புல வரைபடத்தில் உள்ளது. இந்த சர்வே எண்.187/11 உள்ள பாதையை தான் 3, 4 பிரதிவாதிகள் கனகம் மற்றும் செல்லதுரை ஆகியோர்கள் பயன்படுத்தி வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். இந்த சர்வே எண்.187/11 பாதையில் முதல் வாதியாகியாக எனக்கும், 5 ம் பிரதிவாதியாக ராதாகிருஷ்ணனுக்கும் எந்தவிதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மனைக்கு

10.06.2025



பக்கத்தில் உள்ளஅரசு புறம்போக்கு நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தேன், அதனை 3,4,5 பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்ததால் அவர்கள் மீது இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய சர்வே எண்.187/13 நிலத்தினை கோவிந்தம்மாளிடமிருந்து கிரையம் பெற்ற ஆவணத்தில் 513 சதுரடி அளவுள்ள கிணறு இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் 513 சதுரடி அளவுள்ள கிணற்றுக்கு தனியாக சர்வே எண் கொடுக்கப்பட்டது, என்னுடைய நிலத்திற்கும், அந்த நிலத்திற்கும் சந்தமில்லை. அந்த 513 சதுரடி கிணற்றை நான் தான் மூடி தூற்றேன் என்றாலும் அதற்கு அருகாமையில் உள்ள அரசு புறம்போக்கை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல.

15. கிராம பஞ்சாயத்து அலுவலகம் மூலமாக தான் அந்த 513 சதுரடி கொண்ட கிணறு மூடப்பட்டது. சர்வே எண்.187/11ல் உள்ள பாதை கீழ்புறம் 2 மீ அகலமும், மேல்புறம் 3.6 மீ அகலம் இருந்து வருகிறது, 5ம் பிரதிவாதி ராதாகிருஷ்ணன் அரசு புறம்போக்கு பாதையை 10 அடியில் சுமார் 8 அடி ஆக்கிரமிப்பு செய்து வந்ததால் மீதி 2 அடி மட்டும் தான் உள்ளது. எனவே பாதை 2 அடி என பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. யு.டி.ஆர் பட்டா மற்றும் கிராம புலப்பட வரைபடம் ஆகிய ஆவணங்கள் உள்ள அளவுகளை வைத்து தப்புபாத்தியம் கொண்டாடி வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அரசு ஆவணங்கள் பொய்யா ஆவணங்கள் அல்ல. வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-திரு.T. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.